ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2066/9 - 2018 අප්‍රේල් මස 09 වැනි සඳුදා - 2018.04.09

*2066/9 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியல் யாப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியல் யாப்பின் 44(1) ஆவது சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்களுக்கான விடயத் துறைகள் மற்றும் அலுவல்களை ஒப்படைத்தலை இங்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென அரசியல் யாப்பின் 44(5) ஆவது சட்டத்தின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க,
பிரதம அமைச்சர்,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார
அலுவல்கள் அமைச்சர்.

2018, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

**கௌரவ நிரோஷன் பெரேரா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| *அலுவல்கள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கீழான விடயத் துறைகளுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்தல் | 1. தேசிய திட்டமிடல் திணைக்களம் | 1. 1957 இன் 29 ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் சட்டம் |
| 2. தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் செயற் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப் படுத்தல். | 2. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | |
| 3. பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவு செலவுத் திட்டம் உட்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | | |
| 4. சர்வதேச முகவர் நிறுவனங் களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் நிமித்தம் வெளிநாட்டு வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளல். | | |
| 5. உதவி வழங்கும் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | | |
| 6. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுடன் தொடர்பான பாராளுமன்ற வினாக்கள், ஒத்திவைப்புப் பிரேரணைகள் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**கௌரவ கலாநிதி ஹர்ஷ டி சில்வா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| *அலுவல்கள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. உணவு வழங்கல் மற்றும் விநியோகம் எனும் விடயத் துறைகள் மற்றும்IIஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கீழான விடயத் துறைகளுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்தல் | 1. உணவு ஆணையாளர் திணைக்களம் | |
| 2. வாழ்க்கைச் செலவை கண்காணித்தல் மற்றும் தேவையான பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைத்தல். | 2. தரவுப் பகுப்பாய்வு அலகு | |
| 3. குடும்ப பொருளாதார அலகு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கை. | 3. குடும்ப பொருளாதார அலகு | |
| 4. அவசர நிலைமைகளின்போது பயன்படுத்துவதற்கான உணவுப் பொருட்களைப் பேணிவரல். | 4. முன்னேற்ற மீளாய்வு அலகு | |
| 5. தனியார் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பாட்டுமிக்க விநியோகப் பொறிமுறையை மேம்படுத்தல். | | |
| 6. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருக்கு தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்கான பொருளாதாரத் தரவுகளை பகுப்பாய்வு செய்தல். | | |
| 7. செயற் திட்ட அனுகூலங்களை வழங்குவதற்கான பொறிமுறையொன்றை விருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல். | | |
| 8. நாடு பூராவும் உணவு விநியோக நடவடிக்கையை வினைத்திறன் மிக்க வகையில் செயற்பாட்டுடன் மேற்கொள்ளுவதனை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் மற்றும் லங்கா சதொச என்பவற்றுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | |
| 9. கொழும்பு சர்வதேச நிதி நிலையத்துடன் தொடர்பான செயற்பாட்டுக் குழுவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | | |
| 10. '1990 சுவசெரிய அம்புலன்ஸ் சேவை' செயற் திட்ட அலுவல்களை ஒருங்கிணைத்தல். | | |

4-835

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.